**வெருகல் பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெருகல் பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172 (1) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெருகல் பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை உள்;ராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்;ராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.
பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | மீளாய்வாண்டுக்கான 3 நிலையான வைப்புக்கள் மீதான வட்டி ரூபா 312,518 ஆண்டுக்கான வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் குறித்த தவறுகள் சீர் செய்யப்படும். | குறித்த வட்டி வருமானம் நிதிக்கூற்றில் உள்ளடக்கப படல் வேண்டும். |
| ஆ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 199,350 பெறுமதியான வாகனங்களுக்கு ரயர், பற்றிகள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | அடுத்த நிதியாண்டில் சீர் செய்யப்படும். | நிலையான சொத்தில் நீக்கப்படல் வேண்டும். |
| இ) | முன் அலுவலகம் (ஊயடட ஊநவெசந) புனரமைப்புக்கு ரூபா 668,614 செலவு செய்யப்பட்ட போதிலும் நிலையான சொத்தாக ரூபா 613,698 குறைத்துப் பதியப்பட்டதனால் நிதிக் கூற்றில் நிலையான சொத்தின் பெறுமதி ரூபா 54,916 இனால் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | அடுத்த வருடம் நிதிக் கணக்கில் நிலையான சொத்தில் சேர்க்கப்பட்டு சீர் செய்யப்படும் | நிலையான சொத்தில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| இல. 126 | பிரதேச சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்ட விளம்பரப் பலகைகளுக்கான கட்டணங்கள் அறவீடு செய்வதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | விளம்பர பலகைகளுக்கான கட்டணங்களும் அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரச் சட்டத்திற்கு இணங்க துணைச் சட்டங்கள் அனுமதிக்கப்பட்டு கட்டணங்கள் அறவிப்படல் வேண்டும். |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதியின் அத்தியாயம்ஓ பிரிவு 193 | வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவு திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருட நிதிக்கூற்றுக்களில் வருமான செலவு வருடாந்த வரவு செலவுத்திட்டத்துடன் ஒப்பிட்டு முரண்பாட்டிற்கான அட்டவணை தயாரிக்கப்பட்டு இணைக்கப்படும். | நிதி, நிர்வாக விதியின் பிரகாரம் கூற்று தயாரிக்கப் படல் வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் இல 571 | வைப்பிளிடப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்த ரூபா 224,352 வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் படி உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அடுத்த வருட நிதிக் கூற்று தயாரிக்கும் போது சீர் செய்யப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2016.12.29 ஆம் திகதிய 30.'.2016 இல பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | பிரதேச சபையில் பாவனையில் உள்ள 07 வாகனங்களுக்கு எரிபொருள் பரீட்சிப்பு மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிபொருள் பரீட்சிப்பு மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (உ) | 2018.07.19 ஆம் திகதிய 2018.'.ந உள்;ராட்சி - 01 ஆம் இலக்க உள்;ராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப் பட்டிருக்கவில்லை. | பதில் தரப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் இணைய வசதிகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானங்களை மிகைத்த மீண்டுவரும் செலவுகள் ரூபா 1இ060இ101 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4இ222இ602 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | வீதவரி மற்றும் வரி | | |
| | 1987 ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பந்தி 158(1) ற்கு அமைவாக பிரதேச சபை பிரதேசத்தில் உள்ள ஆதனங்களுக்கு வீதவரியும் வரியும் அறவிடப்படுவதில்லை. | எதிர்காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் வீதவரி நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| ஆ) | வாடகை | | |
| | பிரதேச சபையினால் ரூபா 666,570 பெறுமதியான கடை வாடகை நிலுவை, குடிநீர் விநியோக கட்டணம் மற்றும் இயந்திர வாடகை நிலுவை என்பன உரிய நபர்களை இனங்காண முடியாமையால் 03 தொடக்கம் 10 ஆண்டுகளாக அறவீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | விரைவில் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த நிலுவைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| அ) | கூட்டுமொத்தம் ரூபா 7,561,413 பெறுமதியான 9 நிலையான வைப்புக்கள் 4 முதல் 12 வருடங்களாக சபையின் நோக்கங்களுக்கு பயன் படுத்தப்படாமல வைக்கப்பட்டிருந்தது. | குறித்த வைப்புக்களை வருமானம் தரக்கூடிய மூலங்களில் முதலிட நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானம் ஈட்டக்கூடிய மூலங்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| ஆ) | சபைக்குச் சொந்தமான 13 கடைகளுக்கான ஆண்டுக்கான மொத்த வாடகை வருமானம் ரூபா 766,400 காட்டப்பட போதிலும் ரூபா 511,820 மாத்திரம் நிதிக்கூற்றில் காட்டப்பட்டுள்ளது. | 03 மாதங்கள் வாடகைச் சலுகை பதிவழிப்பு செய்யப் பட்டதுடன் ஒரு கடையானது வியாபார மந்த நிலைமை காரணமாக பூட்டப்பட்டது. இதன் காரணமாக குறித்த ரூபா 254,380 வாடகை வருமானக் குறைவு ஏற்பட்டது. | ஆண்டுக்கான மொத்த வாடகை வருமானம் நிதிக்கூற்றில் காட்டப்படல் வேண்டும். |
| இ) | ரூபா 672,690 கூட்டுமொத்த தொகையான 04 சில்லறைக் கடன் கொடுத்தோர் மீதிகள் கடந்த 08 வருடங்களுக்கு மேலாக் தீர்க்கப்படவில்லை. | அடுத்த வருடம் இது தொடர்பான ஆவணங்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கடன் கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற் கொள்ளப்படல் வேண்டும். |
| ஈ) | தேசிய கொள்கைகளுக்கு அமைவாக கழிவுப் பொருள் முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக் காததுடன் மீளாய்வாண்டில் இயற்கைப் பசளை தயாரிப்புக்காக ஆளுநர் நிதி மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 485,000 பெறுமதியான ஆரடவை உழீநச இயந்திரம் வினைத்திறனாக உட்படுத்தப்பட வில்லை. | திண்மக்கழிவுகளை கூட்டுப் பசளையாக தயாரிக்கும் திட்டம் தற்போது நடை முறைப்படுத்தப்படுகின்றது. பொதியிடல் நடவடிக்கை நிறைவடைந்ததும் விநியோகிக்கப்படும் | திண்மக் கமிவு தொடர்பாக முறையான முகாமைத்துவ திட்ட மொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். |
| உ) | திண்மக்கழிவு முகாமைத்துவம் தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட மற்றும் குறுங்கால செயற்றிட்டங்களுக்கென மீளாய்வாண்டில் ரூபா 1,622,391 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் சபையினால் வருமானமாக எவையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | குறித்த திட்டம் தொடர்பான முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் நோக்கங்களை அடைந்து கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்படும் | திண்மக் கழிவகற்றல் முகாமைத்து வத்தின் மூலம் வருமானம் ஈட்டக் கூடியதாக நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ் 30 பிரதான விடயங்களை நிறை வேற்றுவதற்காக துணைச் சட்டங்கள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 வரை துணைச் சட்டங்கள் 05 விடயங்களுக்காக மாத்திரம் விதிக்கப்பட்டிருந்தன. | ஏனைய துணைச் சட்டங்களை ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | துணைச் சட்டங்களை ஆக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.4 ஒப்பந்த நிருவாகத்திலுள்ள குறைபாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
| --- | --- | --- |
| ரூபா 6,437,869 செலவில் 12 எண்ணிக்கையான வீதிகள் கிரவல் இட்டு புனரமைப்பு செய்யப்பட்ட போதிலும் குறிப்பிட்ட ஊடீசு,20 தரத்திலான கிரவல் இடப்பட்டமையினை உறுதிப் படுத்துவதற்கான பரீட்சிப்பு மற்றும் அமுக்கப் பரிசோதனை மேற் கொள்ளப்பட்டிருக்காமையினால் வீதியின் தரத்தை உறுதிப்படுத்த முடியாது ள்ளதுடன் எதிர்வரும் ஆண்டுகளில் வீதி புனரமைப்புக்காக மீளவும் நிதி செலவீடு மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படமுடியுமென அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் ஊடீசு தரத்தினை உறுதிப் படுத்துவதற்கான அறிக்கை பெறப்பட்டு வீதிகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த வீதிகளை புனரமைக்கும் போது அவற்றின் தரத்தினை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும் | | |
| ஆரம்ப நிலை மட்டத்தில் 10 பதவி வெற்றிடங்களும், இரண்டாம் நிலை அலுவலகர் மட்டத்தில் 04 பதவி வெற்றிடங்களுக்குமாக மொத்தமாக 14 வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்பட வில்லை. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்ட போதிலும், கணக்காய்வு நடவடிக்கை எவையும் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | தற்போது உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |